# இங்கிலாந்துக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது

மார்ச் 19, 2023

லண்டனில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கு எதிராக பிரிவினைவாத மற்றும் தீவிரவாத சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் கடும் எதிர்ப்பை தெரிவிக்க, புதுதில்லியில் உள்ள இங்கிலாந்து மூத்த தூதரக அதிகாரி இன்று மாலை நேரில் அழைக்கப்பட்டார்.

இந்த கூறுகளை உயர் ஸ்தானிகராலய வளாகத்திற்குள் நுழைய அனுமதித்த பிரிட்டிஷ் பாதுகாப்பு முழுமையாக இல்லாததற்கு விளக்கம் கோரப்பட்டது. வியன்னா உடன்படிக்கையின் கீழ் இங்கிலாந்து அரசாங்கத்தின் அடிப்படைக் கடமைகள் குறித்து அவருக்கு இது தொடர்பாக நினைவூட்டப்பட்டது.

இங்கிலாந்தில் உள்ள இந்திய தூதரக வளாகங்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பில் இங்கிலாந்து அரசின் அலட்சியப்போக்கு ஏற்றுக்கொள்ள முடியாததாக இந்தியா கருதுகிறது.

இன்றைய சம்பவத்தில் தொடர்புடைய ஒவ்வொருவரையும் கண்டறிந்து, கைது செய்து விசாரணை நடத்தவும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவும் இங்கிலாந்து அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**புது தில்லி**
**மார்ச் 19, 2023**